பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 தை 21 செவ்வாய்க்கிழமை (03-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 58


# கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ந்து மோதல்கள்!

## வான் குண்டு வீச்சும் தீவிரம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 3

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சிப் பகுதி மீது நேற்று முன்தினம் அதிகாலை 1.50 மணிக்கு புலிகள் நடத்திய திடீர் பாய்ச்சல் தாக்குதலை அடுத்து தொடர்ந்து நேற்று இரண்டாவது நாளாக அங்கு மோதல்கள் இடம்பெற்றன. அப்பகுதியில் விமானக் குண்டு வீச்சும் தொடர்ந்து அகோரமாக இடம்பெற்றது.

படைத் தளத்தின் மீது புலிகள் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருவதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

நேற்று முன்தினம் சண்டை நடந்த பகுதிக்குத் தெற்கே உள்ள பிரதேசத்தை மேலதிக துருப்புகளின் உதவியோடு தரைத் துருப்புக்கள் துப்புரவு செய்து வருவதாகவும்—

தப்பியோடிய புலிகள் விட்டுச் சென்ற மிதிவெடிகள்,

(10 ஆம்பக்கம் பார்க்க)

## 150 புலிகள் பலி!

### ‘புலிகளின் குரல்’ தகவல்

### மேலும் 26 பேரின் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 3

கிளிநொச்சி— பரந்தன் சமரில் இதுவரை கிடைத்த தகவல்களின்படி புலிகளின் தரப்பில் நூற்றியைம்பது பேர் களப்பலியாகியுள்ளனர் என ‘புலிகளின் குரல்’ தெரிவித்தது.

இச்சமரில் உயிரிழந்த 24 பேரின் பெயர், விவரங்கள் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தது தெரிந்ததே. மேலும் 26 பேரின் விவரங்கள் நேற்று வெளியாகின. அவை வருமாறு:-

★ கரிகாலன் (பாலசுந்தரம் நந்தகுமார் — அம்பாள் குளம்.)

★ ரவீந்திரன் அல்லது பாரி (ஆறுமுகம் ராசேந்திரன் — மஸ்கேலியா.)

★ வெற்றி (குமாரவேல் ஜெயக்குமார் —முறிகண்டி.)

★ கடல்வேந்தன் (நாகராசா சுந்தரமேனன்—யாழ்ப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் நேற்று 11 பெண்புலிகள் பலி!

யாழ்ப்பாணம், பெப். 3

பரந்தன் பகுதியில் நேற்று சிறு குழுவாகத் தங்கியிருந்த பெண் புலிகளின் அணி ஒன்றைப் படையினர் சுற்றி வளைத்துத் தாக்கியதாகவும்—

இந்தத்தாக்குதலில் பத்துப் பெண் புலிகள் உயிரிழக்க, மற்றொரு பெண் புலி காயங்களுடன் கைது செய்யப்பட்டதாகவும் —

வடபகுதி இராணுவத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## பலியான புலிகளின் சடலங்களை ஒப்படைக்கும் முயற்சி தோல்வி?

யாழ்ப்பாணம், பெப். 3

கிளிநொச்சி —பரந்தன் சமரில் களப்பலியான புலிகளின் சடலங்களை மீள ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் பலனளிக்கவில்லை என்று தெரிய வருகின்றது.

புலிகளின் சடலங்களை ஒப்படைக்கத் தயார் என்ற தகவலை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் இராணுவ தலைமைப் பீடம் புலிகளின் தலைமைப்பீடத்துக்கு நேற்று முன்தினமே தெரியப்படுத்தியதாகத் தெரிகின்றது.

புலிகளின் அடையாள இலக்கத் தகடு அல்லது புலிகளின் சீருடை அணிந்திருக்கும் சடலங்களை மட்டுமே தாங்கள் பொறுப்பேற்க முடியுமென்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் புலிகளின் தலைமைப் பீடம் பதிலளித்ததாகவும் —

அதைத் தொடர்ந்து சடலங்களை ஒப்படைப்பது தொடர்பான நடவடிக்கை முறைகுறித்து ஆராயப்பட்ட

(9 ஆம் பக்கம் பார்க்க)

### நிர்வாகத்தின் போக்கை ஆட்சேபித்து:

## சத்திர சிகிச்சை நிபுணர் நேற்று ஆஸ்பத்திரியில் அஹிம்சைப்போர்

### யாழ். நகரத் தளபதி மெண்டிஸ் தலையிட்டு சமரச முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 3

பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரை யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் கீழ்த்தரமாக நடத்தியதை ஆட்சேபித்து சம்பந்தப்பட்ட சத்திர சிகிச்சை நிபுணர் அமைதி வழியில் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார். சம்பவத்தை அறிந்து மருத்துவபீட மாணவர்கள் வெகுண்டு எழுந்து, ஆர்ப்பாட்டப் போராட்டங்கள் நடத்த ஆயத்தமானபோது யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் நேரடியாகத் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்.

இது குறித்து தெரியவருவதாவது:-

பேராசிரியர் குணானந்தன், யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் ஒரேயொரு நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் இவர் நீண்டகாலமும் தமது குடும்பத்துடன் அமெரிக்காவில் தங்கியிருந்தவர்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் குடாநாட்டுக்கு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 3

விடுதலைப் புலிகள் தமது அதிகாரபூர்வ வானொலியான ‘புலிகளின் குரல்’ ஒலிபரப்பை யாழ். குடாநாட்டுக்கு விஸ்தரித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

வன்னியின் மேற்குப் பிரதேச மக்களும், யாழ். குடாநாட்டு மக்களும் பண்பலையில் 94 அலைவரிசையில் புலி

(10ஆம் பக்கம் பார்க்க)

## 50 படையினர் சடலங்கள் புலிகள் ஒப்படைப்பர்?

யாழ்ப்பாணம், பெப். 3

கிளிநொச்சி — பரந்தன் சமரின் போது உயிரிழந்த ஐம்பதுக்கும் அதிகமான படையினரின் சடலங்களைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் தாங்கள் கையளிக்கவிருப்பதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

சண்டை நடைபெறும் இடங்களில் படையினரின் மேலும் பல சடலங்களைத் தாங்கள் கண்டெடுத்து வருவதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

படையினரின் சடலங்கள் வவுனியா ஊடாகத் தென்பகுதிக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன.

(உ-ஐ-9)

## கிளிநொச்சி ம. வி. தகர்ந்து போனது!

யாழ்ப்பாணம், பெப். 3

பரந்தன், கிளிநொச்சி பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள பெரும் தாக்குதலைத் தொடர்ந்து கிளிநொச்சியில் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது நேற்று இரண்டாவது நாளாக கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக்காலை நடத்திய அகோர குண்டு வீச்சில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் தகர்ந்து போனதாகவும்—

கிளிநொச்சி சின்ன மகாவித்தியாலயம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதில் அது பலத்த சேதமடைந்துள்ளதாகவும் அந்த வானொலி தெரிவித்தது. (ஐ-9)

### கனகராயன்குளத்தில்

## கண்ணியில் சிக்கி படை அதிகாரி பலி!

கொழும்பு, பெப். 3

கனகராயன்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு படையினரின் வாகனம் ஒன்று கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்கானது.

இத்தாக்குதலில் அவ் வாகனத்தில் சென்ற படை அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்; 4 படையினர் காயமடைந்தனர்.

படையினருக்கு உணவு எடுத்துச் சென்ற வாகனமே கண்ணிவெடியில் சிக்கியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-21-3)

## ராஜினாமாவை வாபஸ் வாங்கினார் அனுருத்த!

கொழும்பு, பெப். 3

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்வதை அனுருத்த ரத்வத்த வாபஸ் பெற்றுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.

முற்றிலும் கொள்கை அடிப்படையிலும், மனச்சாட்சிப்படியுமே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்வதற்குத் தாம் முன்பு முடிவு செய்ததாகவும் —

ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்ததையடுத்து தமது தீர்மானத்தை மாற்றிக் கொள்வது தொடர்பாகப் பதில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு முழுவதும் பாதுகாப்பு வலயம்!

கொழும்பு, பெப். 3

நாளை சுதந்திர தினப் பொன்விழா நிகழ்ச்சிகள் கொழும்பு நகரில் நடைபெறுவதை ஒட்டி கொழும்பு மாநகரம் முழுவதுமே பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தை ஒட்டி அலங்கார ஊர்திகளின் பவனி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கடைசி நேரத்தில் அத்திட்டம் கைவிடப்பட்டது.

பொன் விழா நிகழ்ச்சிகள் நடைபெறும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர நாடாளுமன்றக் கட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்மணி சிவலிங்கம்

நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி பொன்மணி சிவலிங்கம் அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் அருமை மனைவியும், வேதாரணியம், சுந்தரலிங்கம், சண்முகலிங்கம் (நியூசிலாந்து), நாகேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், மகேஸ்வரி, கலைவாணி, வசந்தி (நியூசிலாந்து), சரவணபவன் (கனடா), சிவபாதநாதன் (விஜயா) ஆகியோரின் அருமை மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (4-2-98) புதன்கிழமை காலை 10 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. வேதாரணியம்
சி. சுந்தரலிங்கம்
(மக்கள்)

''லிங்கஸ்தான்''
555, நாவலர் வீதி,
நல்லூர்.

(53065)

## கணபதிப்பிள்ளை ஜெகதீசன்

(அளவெட்டி — மல்லாகம் ப. நோ. கூட்டுறவு சங்கத் தலைவர்)

அளவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை—ஜெகதீசன் 02-02-98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அன்னலட்சுமி தம்பதிகளின் இளைய மகனும், நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், கலைமதி (வலிகாமம் மேற்கு பிரதேசசபை), கலைச்செல்வன் (U K.), கலைவாணி, கலையரசி (மக்கள் வங்கி, சுன்னாகம்), கலைஜெனனி (தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி மாணவி), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்றவர்களான நல்லம்மா, சண்முகநாதன், சச்சிதானந்தம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-02-98) செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணிக்கு மானிப்பாய் உடுவில் றோட் சிவ-வில்ல இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1-00 மணியளவில் கூட்டுறவாளர் வீதியில் அமைந்துள்ள அளவெட்டி-மல்லாகம் பல- நோ. கூ. சங்க மண்டபத்தில் அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் மல்லாகம் (சமிகானை-வல்லை வீதியில்) இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
மனைவி. பிள்ளைகள்

சிவ வில்லா,
மானிப்பாய்.

(கி/2793)

## Dr. S. இராசநாயகம்

(இளைப்பாறிய மகப்பேற்று வைத்திய நிபுணர் FRCS, MRCOG)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. S. இராசநாயகம் நியூசிலாந்தில் காலமானார்.

அன்னார் Dr. சீதாவின் அன்புக் கணவரும், Dr. சரஸ்வதி (கலிபோர்னியா), ஜனக்குமார் (Accountant, நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான Dr. சங்கரப்பிள்ளை, தங்கப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், Proctor M. சுப்பிரமணியம் (J P), M. செல்லத்துரை (O A, J.P) ஆகியோரின் பெறாமகனும், கிஷான், தர்ஷன், இஷானி, கிரிசாந்தி, வனூஜி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31-12-97 அன்று நியூசிலாந்தில் நடைபெற்றன.

தகவல்:
திருமதி நகுலாம்பிகை அம்பிகைபாகன்
திருமதி மகேஸ்வரி-பஞ்சலிங்கம்
(ஒன்றுவிட்ட சகோதரர்)

மல்லாகம்.

(53058)

## திருமதி தம்பையா தங்கம்மா

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த தம்பையா தங்கம்மா ஞாயிற்றுக்கிழமை 01 - 02 - 1998 இல் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர் தம்பையாவின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, சண்முகராசா, யோகேஸ்வரி, மேனகை ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற கணேசபிள்ளை, புஸ்பராணி, சுந்தரலிங்கம் (பதுளை), விசுவநாதன் (காரைநகர் ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் 02 - 02 - 1998 அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மு. விசுவநாதன்
(மருமகன்)

கருங்காலி,
காரைநகர்.

(53062)


சித்த மருத்துவ மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்துத் தயாரிக்கப்பெற்றது

ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்

என்று கேட்டு வாங்கிப் பயன் பெறவும்.

ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் தயாரிப்பாளர்கள்

ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைசஸ்,

கைதடி. (52934)



லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்

செவ்வாய், புதன் மட்டும்

விஜய் – சூர்யா நடித்த

"நேருக்கு நேர்"

வியாழன் முதல்

முரளி – கௌசல்யா நடித்த

"காலமெல்லாம் காதல் வாழ்க"

பழைய நேரம்

10-30. 2-30.

(53059)


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத் தலைவர்
திரு. சி. வேதாரணியம் (பெரியண்ணை)
அவர்களதும்
சங்க உறுப்பினர்
திரு. சி. சுந்தரலிங்கம் அவர்களதும்
அன்புத் தாயாரான

### திருமதி சிவலிங்கம் பொன்மணி

அவர்கள் காலமானார். அன்னாரின் மறைவுக்கு எமது சங்கம் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரது பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகத்தினரும், உறுப்பினர்களும்
யா. மா. பா. ஊ. கூ. சங்கம்,
209, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

(53064)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தலைவர்

### க. ஜெகதீசன் அவர்களின்

எதிர்பாராத மறைவினால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்கி அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பணிப்பாளர்களும், பணியாளர்களும்.
அளவெட்டி மல்லாகம் பல நோ. கூ. சங்கம்
அளவெட்டி.

(கி/2792)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

## சரஸ்வதி கல்வி நிலையம்

நுணாவில் மத்தி, சாவகச்சேரி.
[வைரவர் கோயிலடி]

## 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை-1997

### சித்திபெற்றோர் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி ஜீவிகா விவேகானந்தன் | — | 140 |
| 2. | செல்வி அடினா திருக்குமார் | — | 131 |
| 3. | செல்வி துஷிக்கா பத்மகாந்தன் | — | 126 |
| 4. | செல்வன் சஸ்வரதாசன் இலக்ஷ்மன் | — | 125 |
| 5. | செல்வி காஞ்சனா கந்தசாமி | — | 119 |
| 6. | செல்வி வைஷ்ணவி பரமேஸ்வர ஐயர் | — | 117 |
| 7. | செல்வன் இரத்தினம் இராகேஷ் | — | 116 |
| 8. | செல்வன் அருணோதயராஜா ராஜீவன் | — | 116 |
| 9. | செல்வி காயத்திரி இராசேந்திரம் | — | 116 |
| 10. | செல்வி தாரணி இராசதுரை | — | 112 |
| 11. | செல்வி சஸ்ரூபி ஸ்ரீ ஆனந்தராஜா | — | 111 |
| 12. | செல்வன் இலங்கேஸ்வரன் அகிலன் | — | 110 |
| 13. | செல்வன் சுப்பிரமணியம் சஜானந் | — | 110 |
| 14. | செல்வி கோபிகா குலசேகரம் | — | 109 |
| 15. | செல்வன் சிவராசா அகிலீதரன் | — | 108 |
| 16. | செல்வன் தெய்வேந்திரன் மயூரன் | — | 107 |
| 17. | செல்வி கீர்த்திகா இராசரத்தினம் | — | 107 |
| 18. | செல்வி கார்த்திகா தர்மலிங்கம் | — | 106 |
| 19. | செல்வி இந்து பாலசுப்பிரமணியம் | — | 106 |
| 20. | செல்வி கமலினி சிவானந்தா | — | 105 |
| 21. | செல்வன் கோகுலராஜ் சசிபாலன் | — | 103 |
| 22. | செல்வன் இராசரத்தினம் தசீதரன் | — | 103 |
| 23. | செல்வி பிரதர்சா முத்துக்குமார் | — | 103 |
| 24. | செல்வன் ஸ்ரீஸ்கந்தராஜா முகுந்தன் | — | 101 |
| 25. | செல்வன் சுந்தரலிங்கம் கபில்ராஜ் | — | 101 |
| 26. | செல்வி திவ்யா ஜெகதீஸ்வரக் குருக்கள் | — | 100 |
| 27. | செல்வன் சச்சிதானந்தமூர்த்தி சசிகுமார் | — | 100 |
| 28. | செல்வன் கனகலிங்கம் தர்ஷன் | — | 100 |
| 29. | செல்வன் சிவகடாட்சம் ஜன்சத்தியன் | — | 99 |
| 30. | செல்வன் தர்மகுலசிங்கம் சாமீபன் | — | 99 |
| 31. | செல்வன் சந்தையா மணிதீபன் | — | 99 |
| 32. | செல்வி மதுமதி குணரட்ணம் | — | 99 |
| 33. | செல்வன் தர்மேந்திரன் தர்மசீலன் | — | 98 |
| 34. | செல்வன் ஜெயரவீந்திரன் ரவிராஜ் | — | 98 |
| 35. | செல்வன் ரவீந்திரன் பிரசன்னா | — | 98 |
| 36. | செல்வன் நவரட்ணவேல் சஞ்சயன் | — | 95 |
| 37. | செல்வன் சுந்தரலிங்கம் விஜயராஜ் | — | 95 |
| 38. | செல்வி சகிலா செல்வராஜா | — | 95 |
| 39. | செல்வன் புலேந்திரகுமார் சஜவதனன் | — | 95 |
| 40. | செல்வி நிக்ஸலா மாணிக்கதாஸ் | — | 95 |
| 41. | செல்வி கிரிசா சிவானந்தமூர்த்தி | — | 95 |
| 42. | செல்வன் இராசதுரை நிரூஜன் | — | 95 |
| 43. | செல்வன் சந்திரபாலன் நிசாந் | — | 94 |
| 44. | செல்வன் மகேந்திரன் மயூரன் | — | 93 |
| 45. | செல்வன் சிவானந்தன் செந்தூரன் | — | 93 |

இவர்களுள் 140 புள்ளிகளைப் பெற்று தென்மராட்சியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற செல்வி ஜீவிகா விவேகானந்தனைச் சிறப்பாகப் பாராட்டுவதுடன், ஏனைய மாணவர்களையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திருமதி சியாமளா சோமசுந்தர ஐயர்,
(நிலைய ஆசிரியை)
பெற்றோர்.

(கி/2783)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் [illegible] நூலகம்

ஈராக் மீதான தாக்குதலுக்கு

# தனது பிரதேசத்தை பயன்படுத்த அமெரிக்காவுக்கு சவூதி மறுப்பு!

றியாத், பெப். 3

ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கு தனது பிரதேசத்தை பயன்படுத்த அமெரிக்காவுக்கு அனுமதி அளிக்கப்போவதில்லை என்று சவூதிஅரேபியா அறிவித்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஆல்பிரைட் நேற்று சவூதிஅரேபியாவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு முன்னதாகவே சவூதி அரசாங்க அதிகாரி ஒருவர் இதனை உறுதிப்படத் தெரிவித்துவிட்டார்.

அதேசமயம் ஜெத்தாவில் அமைந்துள்ள இஸ்லாமிய மாநாட்டு விதாயனம் ஐ.நா. தலைமைச் செயலர் கோபி அனானுக்கு அனுப்பியுள்ள செய்தி ஒன்றில் அமெரிக்க மிரட்டல் குறித்து கவலை வெளியிட்டுள்ளது.

இந்த நெருக்கடிக்கு முடிவு கட்ட ராஜீய ரீதியிலான தீர்வு ஒன்றை காணுமாறும் அது கேட்டுள்ளது.

ஆயுத கண்காணிப்புக்குழு குறித்து ஈராக்கிய அதிகாரிகளுடன் பேச பிரெஞ்சு அதிகாரிகள் இன்று பாக்தாத் போய்ச் சேருகிறார்கள்.

இந்த முயற்சி போன்று மற்றொரு முயற்சியாக ரஷ்யத் தூதுவர் ஏற்கனவே பாக்தாத் சென்றுள்ளார்.

1991 வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்கா தலைமையிலான நேசப் படைகள் சவூதி அரேபியாவில் இருந்து குவைத் மீது தாக்குதல் நடத்துவதற்கு சவூதி அரேபியா அப்பொழுது அனுமதி அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

# இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எகிப்தில் மரணதண்டனை

கெய்ரோ, பெப். 3

எகிப்திய இராணுவ நீதி மன்றம் ஒன்று இருஇஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கி உள்ளது. 31 தீவிரவாதிகளுக்கு சிறைத் தண்டனை வழங்கியது.

கடந்த நவம்பர் மாதம் எகிப்திய உல்லாசப் பயணிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து இவர்கள் கைதாகி இருந்தனர்.

எகிப்திய அரசு இஸ்லாத்துக்குப்புறம்பான அரசு எனக் கூறும் இஸ்லாமிய தீவிரவாதிகள்6 ஆண்டுகளுக்கு முன்பு ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினர்.

லக்ஷோரில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு தமது அமைப்பே காரணம் என இந்த தீவிரவாத அமைப்பு உரிமை கோரி இருந்தது.

மரதண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் ''கடவுள் பெரியவர், இஸ்லாத்திற்காக நாங்கள் விசுவாசமாக இருப்பதை சிறைச்சாலையும், தூக்கு மேடையும் தடுக்க முடியாது'' போன்ற கோஷங்களை எழுப்பினர். (இ-7)

# காங்கிரஸ் மன்னிப்புக் கோர வேண்டும் என்கிறார் வாஜ்பாய்

சென்னை, பெப். 3

''முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பான ஜெயின் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் அடிப்படையில் மத்தியில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்த்த காங்கிரஸ் கட்சி தற்பொழுது அந்த அறிக்கையை தேர்தல் பிரசாரமாக்காமல் இருந்து வருகிறது. ஆகவே அரசைக் கவிழ்த்ததற்காக காங்கிரஸ் கட்சி மன்னிப்புக் கேட்க வேண்டும்.''

பாரதீயஜனதாக்கட்சித்தலைவர் வாஜ்பாய் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

சென்னையில் அ.தி.மு.க.—பாரதீய ஜனதா தலைமையிலான முன்னணியின் பேரணியில் பேசுகையில் இந்த கோரிக்கையை அவர் விடுத்தார்.

ஜெயின் ஆணைக்குழுவின் அறிக்கை மொத்தமாக தமிழர்களையே சிறுமைப்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார்.

[இ-3]

# மேற்கு கரையில் மோதல்

ஜெருசலம், பெப். 3

மேற்குக் கரையில் இஸ்ரேலிய காவல்துறையின் பாதுகாப்பில் இருந்த உள்ளூர் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேல் படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

(ஐ-3)

# தென்கொரிய நாடாளுமன்றம் கூடுகிறது

சோல், பெப்.3

தென்கொரிய நாடாளுமன்றத்தின் விசேட கூட்டம் ஒன்று நடைபெறுகின்றது.

தொழிலாளர்களை இலகுவில் வேலையில் இருந்து நிறுத்துவதற்கு வகை செய்யும் சர்ச்சைக்குரிய சட்டமூலம் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் முதலிடம் பெறுமென எதிர் பார்க்கப் படுகின்றது.

# கனடா வாழ் ஈழத் தமிழர்கள் பிரேதப் பெட்டியுடன் பேரணி

## பொன் விழாக் கொண்டாட்டத்துக்கு எதிர்ப்பு

ரொரன்டோ, பெப். 3

இலங்கையின் சுதந்திர பொன் விழா கொண்டாட்டத்தை கண்டித்து கனடாவின் ரொரன்டோ நகரில் நேற்று முன்தினம் மாபெரும் எழுச்சிப்பேரணி நடைபெற்றது.

ரொரன்டோ நகரமண்டபத்தில் ஆரம்பமான இந்தப் பேரணியில் பிரேதப் பெட்டியுடனான ஊர்தி ஒன்றும் சென்றது.

'80 ஆயிரம் மக்களைக் கொன்ற சந்திரிகா மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது' என்று அந்த பிரேதப் பெட்டியில் எழுதப்பட்டிருந்தது.

இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை எடுத்து விளக்கும் ஊர்திகள் இப்பேரணியில் சென்றன. 80 ஆயிரம் ஈழத்தமிழர் இதில் பங்கேற்றனர்.

ஒன்ரோறியா மாநில ஆட்சி மன்றத்தை இப்பேரணி அடைந்த பின்னர் அங்கு கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

(இ-3)

# உயர்மட்ட ஊழல்கள் குறித்து தகவலை அரசு வெளியிட வேண்டும்

## பாரதீயஜனதா தலைவர் கோரிக்கை

புதுடில்லி, பெப். 8

இந்தியாவில் உயர்மட்ட அளவில் நடந்ததாகக் கூறப்படும் ஊழல்கள் குறித்த தகவல்களை அரசு தரவேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் வாஜ்பாய் கேட்டுள்ளார்.

ஆந்திர மாநிலத்தில் நடந்த தமது இரு நாள் பிரசாரத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதைத்தெரிவித்தார்.

ஊழல்கள் தொடர்பான சகல விடயங்களையும் வெள்ளை அறிக்கை வடிவில் வெளியிட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

உயர்மட்ட தலைவர்களின் ஊழல்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இருந்தால் என்ன, தற்சமயம் விசாரணையில் இருந்தால் என்ன அவை தொடர்பான சகல விடயங்களையும் அரசு பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரினார்.

(-8)

# ஈராக் மீதான படை நடவடிக்கை இந்தியா எதிர்ப்புத் தெரிவிப்பு

புதுடில்லி, பெப். 3

ஈராக் மீது அமெரிக்கா திட்டமிட்டு வரும் இராணுவத்தாக்குதல் நடவடிக்கைக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இந்திய பிரதமர் ஐ.கே. குஜ்ரால் இது குறித்த தகவலை நேற்று முன்தினம் புதுடில்லியில் தெரிவித்தார்.

ஈராக் இடம் உள்ள நாசகார ஆயுதங்கள் அழிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை தான். ஆனால் ஈராக் மீதான இராணுவத்தாக்குதல் இந்தப் பிரதேசத்தின் அமைதியைச் சீர்குலைக்கும். அத்தோடு அப்பிரதேசத்தில் தொழில் புரிந்து வரும் 2 லட்சம் இந்தியர்களின் வாழ்க்கைக்கும் கேடுவிளைவிப்பதாக அமையும்எனக் குஜ்ரால் தெரிவித்தார்.

(ஐ-7)

# சோனியா கோரிக்கை

ராஜீவ் காந்தி படுகொலைக்கு வழிவகுத்தசதித்திட்டத்தை அனைவருமே அறிய அம்பலப்படுத்த வேண்டும் என்றும்—

உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடித்து தண்டனை வழங்கிட வேண்டும் என்றும்—

திருமதி சோனியா காந்தி அரசாங்கத்திடம் கேட்டுள்ளார்.

அமெதி தொகுதியில் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கோரினார். [இ-3]

# இஸ்ரேலிய விமானங்கள் லெபனானில் குண்டுவீச்சு!

பேரூட், பெப். 3

இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா நிலைகள் எனச் சந்தேகிக்கப்படும் இடங்கள் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தின.

இஸ்ரேலிய நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஹிஸ்புல்லா இயக்கம் பயன்படுத்தி வந்த இடங்கள் மீது இஸ்ரேலியப் போர் விமானங்கள் றொக்கட் தாக்குதல் நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

உயிரிழப்புகள் பற்றிய விவரங்கள் உடனடியாகத் தெரிய வரவில்லை.

இது வரையும் 7 தடவைகள் இஸ்ரேலிய விமானங்கள் லெபனான் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

(இ-7)

# சீனாவில் கவிஞர்கள் தடுத்து வைப்பு

தென் சீனாவில் உள்ள ஜேனியா என்ற இடத்தில் 4 கவிஞர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என ஹொங்கொங்கில் இயங்கும் மனித உரிமைக்குழு ஒன்று குற்றஞ்சாட்டி உள்ளது.

சீனாவில் கலாசார மறுமலர்ச்சி ஒன்றை ஊக்குவிக்க அதிகாரபூர்வமற்ற நூல் ஒன்றை வெளியிடத் தயாராக இருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலீஸார் கையெழுத்துப் பிரதிகளையும், இலக்கிய ஆய்வேடுகளின் பிரதிகளையும் எடுத்துச் சென்றனர் என மனித உரிமைக் குழு கூறியுள்ளது. (இ-7)

# இஸ்ரேலுடனான பேச்சில் முன்னேற்றம் இல்லை

வாஷிங்டன், பெப் 2

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மெடலின் ஆல்பிறைட் மத்திய கிழக்குக்கும், ஐரோப்பாவுக்கும் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகள் குறித்து இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்ஜமின் நத்தனியாகுவுடன் சுமார் 4 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்திய போதிலும் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் பலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத்துடனும் பேச்சு நடத்தி உள்ளார்.

ஸ்தம்பிதமடைந்துள்ள மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிப்பது பற்றியும், ஈராக்குக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றியும் பேச்சுவார்த்தைகளின் போது முக்கியமாக ஆராயப்பட்டது.

மேற்குக் கரை நகரான ரமலாவில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

(இ-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்!

### யா/ இணுவில் மத்திய கல்லூரியில்

கல்வி கற்று 1997 இல் நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

| | |
|---|---|
| ப. அஜந்தன் | இ. சஜீதா |
| இ. இராகுலன் | சி. யாழினி |
| அ. அமிர்தலோஜனன் | த. சங்கீதா |

ஆகிய மாணவர்களையும் இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் நெறிப்படுத்திய அதிபர் அவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(49940)

## வாழ்த்துகின்றோம்

### யா/இராமநாதன் 'கல்லூரியில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான

1. தே. கவிதாஸ் — 116
2. மு. முரளிதரன் — 97
3. செ. கார்த்திகா — 95
4. சே. கீர்த்தனா — 93
5. க. நிரஞ்சன் — 93

ஆகியோர்களை வாழ்த்திப் பாராட்டுவதுடன் இவர்களை நெறிப்படுத்திய பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா / இராமநாதன் கல்லூரி.

(சி/2788)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுப்பொதுக்கூட்டம் -1998

## யா\ கம்பர்மலை அ. த. க. பாடசாலை வல்வெட்டித்துறை

மேற்படி நிகழ்வு பாடசாலை அரங்க மண்டபத்தில்
கௌரவதலைவர்
திரு. மு. அனந்தேஸ்வரன் (அதிபர்)
B. A. (Hons), B. Ed, (Hons)
அவர்களின் தலைமையில் 15-02-1998 (ஞாயிறு) பி. ப. 3.00 மணியளவில் நடைபெறும். இதில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

மு அனந்தேஸ்வரன் — தலைவர்
இரா, அகிலன் — பொதுச் செயலர்,

(53054)

# வாழ்த்துகின்றோம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும்,
யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும்
கொண்ட பிரபல சட்டத்தரணியும்
பதில் நீதிபதியுமாகிய

## உயர்திரு. கந்தையா அரியநாயகம்

அவர்கள் 02-02-98 அன்று மல்லாகம் மாவட்ட நீதிபதி
உயர்திரு. மு. திருநாவுக்கரசு முன்னிலையில்

சமாதான நீதிவானாகவும், உத்தியோகப் பற்றற்ற நீதிபதியாகவும் சத்தியப் பிரமாணம் செய்ததை முன்விட்டு நீதித்துறையில் நல்ல சேவை யாற்ற வேண்டும் என்றும் சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ வேண்டு மென்றும் வாழ்த்துகின்றோம்.

ஐ சின்னப்பு
அஞ்சல் அதிபர்
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(53052)

## ஆரம்பக்கல்வி முன்னோடிப் பாடசாலை

யாழ்ப்பாணம், பெப். 3

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை ஆரம்பக்கல்வி முன்னோடிப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்ய வடக்கு — கிழக்கு மாகாண சபை யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்துள்ள 30 பாடசாலைகளில் இப்பாடசாலை யும் ஒன்றாகும்.

(இ-3)

## சிரமதானம்

செம்பியன்பற்று, பெப். 3

வடமராட்சி கிழக்கில் உள்ள குடத்தனை தென் இந்திய திருச்சபை ஆலய வளாகமும் மாலை நேர வகுப்புகள் நடத்தப்படும் பகுதியும் அவ்வாலய குருவினாலும் மாணவர்கள் ஆசிரியர்களாலும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

(இ-36)

நெல்லியடி
**மஹாத்மா வெண் திரையில்**
02 - 02 - 98 முதல்
மம்முட்டி - தேவயானி
நடித்த
**மறுமலர்ச்சி**
காட்சிகள்:- 10-30, 2-30
(கி/2765)

பிரிவு !!
# A/L 2000
## கலை, வர்த்தகம்

பிரிவு I இல் இடநெருக்கடி காரணமாக
புதிய பிரிவு ஆரம்பம்: 1998 - 02 - 07
(சனி 8 பழைய நேரம்)

## D. M. I
233, STANLEY RD,
JAFFNA.

அனுமதிகளை முன்கூட்டிப் பெறவும்.

(கி-2780) -D. SAM

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## செல்வி விஜயரட்ணம் விஜயமலர்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் திரு உருவாய் வாழ்ந்து எம்மையெல்லாம் மகிழ வைத்த தெய்வமே! உம் நினைவுகளை, நம் கண்ணீர் அஞ்சலிப் பூக்களாய் காலடியில் காணிக்கையாக்குகின்றோம்.

இன்று (03 - 02 - 98 இல்) எமது இல்லத்தில் நிகழும் அன்னாரின் வீட்டுக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர், சகோதரசகோதரிகள்,
மைத்துனி, மருமக்கள்

(குட்டி கடை)
2ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

(சி-2779)

# பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

நடத்தும்

# நாட்டுக்கூத்து இசைநாடகப் போட்டி

## சித்திரை - 1998

பாரம்பரிய கலைகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட கழகம், மரபுவழி நாட்டுக்கூத்துக்களின் செம்மையையும், மரபுவழி இசைநாடகத்தின் கலையையும் துலங்கும் நோக்குடனும், இதில் ஈடுபடும், கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், கலைஞர்களை இனங்காணும் நோக்குடனும், கலைஞர்களைக் கௌரவிக்கும் நோக்குடனும், ஒட்டுமொத்தமாகப் பாரம்பரியக் கலைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் நாட்டுக்கூத்து, இசைநாடகப் போட்டியை ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவு செய்துள்ளோம்.

| | | |
|---|---|---|
| 1) நாட்டுக்கூத்து | — முதல் பரிசு | 5,000 ரூபா |
| | இரண்டாம் பரிசு | 3,000 ரூபா |
| | மூன்றாம் பரிசு | 1,500 ரூபா |
| 2) நாட்டுக்கூத்து சிந்து நடை (காத்தவராயன்) | — முதல் பரிசு | 5,000 ரூபா |
| | இரண்டாம் பரிசு | 3,000 ரூபா |
| | மூன்றாம் பரிசு | 1,500 ரூபா |
| 3) இசை நாடகம் | — முதல் பரிசு | 5,000 ரூபா |
| | இரண்டாம் பரிசு | 3,000 ரூபா |
| | மூன்றாம் பரிசு | 1,500 ரூபா |

மேலும் ஒவ்வொரு நாட்டுக்கூத்தோ, இசைநாடகமோ
போட்டியில் பங்குபற்றும் பொழுது
**மேடை ஏற்றும் செலவாக 2,500 ரூபா**
வழங்கப்படும்.

★ தனி அமைப்புகளோ, கலாமன்றங்களோ, பாடசாலைகளோ, தனிநபர் தயாரித்தோ போட்டியில் பங்கு கொள்ளலாம்.

★ வயதுக்கட்டுப்பாடு இல்லை.

★ போட்டியில் பங்குபற்றுபவர்கள் விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்து 15 - 2 - 98 ஆம் திகதிக்கு முன்பாக

திரு. செ. மெற்றாஸ்மயில்,
செயலாளர்,
**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்**
12/1, முத்துவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்,

என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்க முடியும்.

★ போட்டி நடத்தப்படும் இடம் — **யாழ்ப்பாணம்.**

★ மேற்படி விண்ணப்பப்பத்திரங்களையும், போட்டி விதிகளையும், யாழ்ப்பாணம் 119, கஸ்தூரியார் வீதி, லிங்கன் கிறீம் ஹவுஸில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. மெற்றாஸ்மயில்
செயலாளர்,
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

(53046)

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி தவலட்சுமி கணேசநாதன்

(ஆயுர்வேத வைத்திய கலாநிதி)

மலர்வு: **08 — 06 — 1952**
உதிர்வு: **25 — 12 — 1997**

எங்கள் அன்புத்தெய்வத்தின் இறுதிக்கிரியையில் பங்கு பற்றியும், ஆறுதல் வழங்கியும் மற்றும் சகல வசதிகளையும் அன்புடன் நல்கிய அனைவருக்கும் நாம் நன்றி கூறுவதோடு 03—02—1998 செவ்வாய்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன்,
பிள்ளைகள்.

புதிய ஒழுங்கை,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(53056)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

கிளிநொச்சித் தாக்குதல் நடைபெற்ற இரவில்

# தம்பலகாமப் பகுதியில் உள்ள காவலரண்கள் மீதும் தாக்குதல்

திருகோணமலை, பெப் 3

திருகோணமலைமாவட்டத்தில் உள்ள தம்பலகாமம் பகுதியை அடுத்துள்ள பாரதிபுரம், சிற்பித்திடல், பொக்குறுணி பகுதிகளில் உள்ள பொலீஸ் காவலரண்கள்மீது கடந்த சனிக்கிழமை இரவு 9.30 மணிக்கு விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

80-க்கு மேற்பட்ட விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதல் அதிகாலை 5மணி வரைநீடித்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலில் உருத்திரமூர்த்தி என்ற பசாரதி காயமடைந்தார்.

இதேவேளை — மறுநாள் தம்பலகாமம் பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

திருமலையில் இருந்து தம்பலகாமத்துக்கு செல்லும் சகல பஸ் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி — பரந்தன் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்ட அதே இரவே தம்பலகாமம் பகுதியிலும் தாக்குதல் நடத்தப்பட்டதால் — படையினரின் கவனத்தை திருப்பிவிடும் புலிகளின் தந்திரமாக இது இருக்கலாம் என்று படைவட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3)

## பொன்னாடை

நெல்லியடி, பெப் 3

அல்வாய் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற அபிராமிப்பட்டர் விழாவில் நூற்றியொரு பாடல்களை ஓதிய மாணவனான க.சுதாகரன் மேற்படி ஆலய பிரதம குருவானவ.கிருஷ்ணமூர்த்தி சர்மாவினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

[இ-109]

## சாந்தசோலை பகுதியில் படையினர் தேடுதல்!

### குண்டு ஒன்றும் வெடித்தது

வவுனியா, பெப். 3

வவுனியாவில் உள்ள மாரம்பைக்குளம், சாந்தசோலைப் பகுதிகள் படையினரால் நேற்று முன்தினம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

வயதுவேறுபாடின்றி அனைவரும் சாந்தசோலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கும், அம்மன் கோயிலுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்

ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த சோதனையின் பின்னர் சாந்தசோலையில் குண்டு ஒன்று வெடித்தது.

## 10ஆவது ஆண்டு குருபூசை

நவாலி, பெப். 3

திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் 10 ஆவது ஆண்டு குருபூசை இன்று செவ்வாய் மாலை 5மணி தொடக்கம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திருப்பணித் தவமணி சி. தியாகராசா தலைமையில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக இந்துக் கலாசார திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் கலந்து கொள்வார்.

(இ-100)

## படையினர் பொலீஸார் கொழும்பில் குவிப்பு!

கொழும்பு, பெப். 3

தலைநகர் கொழும்பில் ஆயிரக்கணக்கான படையினரும், பொலீஸாரும் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இலங்கையின் 50 ஆவது சுதந்திர பொன்விழா கண்டியில் இருந்து கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து, விடுதலைப புலிகளின் தாக்குதல் அங்கு இடம்பெறலாம் என்ற அச்சத்திலேயே பாதுகாப்புக்காக படைகள் குவிக்கப்படுகின்றன.

கொழும்புக்குள் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் ஊடுருவி விட்டனர் என்ற ஊகம் நிலவிவருகிறது.

சுதந்திர தினத்தையொட்டி மாணவர்கள் பவனி, ஊர்திகள் பவனி ஆகியன முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் அவை தற்சமயம் நிறுத்தப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம்— சுதந்திர தின நிகழ்ச்சிகள் நடைபெறும் கோட்டே நாடாளுமன்ற பகுதி பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

(இ-3)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

நல்லூர், பெப். 3

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் இவ் வருடம் நடத்தப்படவுள்ள பண்ணிசைப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி அனேக மாணவர்களின் கோரிக்கையை அடுத்து 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சைவசமய விவகாரக் குழுவின் தலைவர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் இதனைத் தெரிவித்தார்.

(இ-108)

வடபகுதியில் இயங்கவுள்ள

# உள்ளூராட்சிச் சபைகளுக்கு சகல வசதிகளும் வழங்கப்படும்

## அமைச்சர் அலவி மௌலானா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 3

வடக்கில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு சகல வசதிகளையும் பெற்றுக்கொடுக்க உடனடி நடவடிக்கை எடுத்து வருவதாக உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் பேசி அமைச்சரவையின் அனுமதியுடன் இந்த உதவிகளை வழங்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்ப்பாண நகருக்கு சென்று உள்ளூராட்சி மன்றங்களின் தேவைகள், நிலைமைகள் குறித்து ஆராயவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

[இ 3]

## தட்டுப்பாடு

அரியாலை, பெப். 3

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பு தடை ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

(ஐ-17)


## வாழ்த்துகின்றோம்



**திரு. க. அரியநாயகம்**
LL. B (Cey.)

சமாதான நீதிவானாகவும் உத்தியோகப்பற்றற்ற நீதிபதியாகவும் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட

யாழ். கச்சேரி — நல்லூர் வீதியைச் சேர்ந்த சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் சத்திய ஆணையாளருமான

திரு. க. அரியநாயகம் அவர்களை வாழ்த்துகின்றோம்.

**ஸ்ரீ அமலா ஜுவலர்ஸ்,**
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2775]


# அறிஞர் அண்ணாவின் தமிழுணர்வு தமிழர்களைஉலகம்அறியவைத்தது

உலகத் தமிழர் மத்தியில் புத்தெழுச்சியையும், தமிழ் உணர்வையும் பரப்பிய அறிஞர் அண்ணாவின் நினைவு நாள் இன்றாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தனித் தமிழ்க் கனல்; திடப நுட்பமான சொல்லாளர்; வீறுமிக்கச் செயலாளர்; அவர் உளளம் தமிழர் உள்ளம்; உணர்ச்சி வெள்ளம்!

அவர் உரையும் எழுத்தும் தமிழர் மதிப்பையும், அம் மதிப்பைக் காக்கும் கொதிப்பையும் உண்டாக்கும் தீப் பொறிகள்!

அண்ணா அவர்களின் புரட்சிக் கனவால் கடல் கடந்த நாடுகளும் மறுமலர்ச்சி பெற்றன. அதனால் தமிழ் நாட்டில் மட்டுமன்றி, உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அண்ணா அவர்களின் தமிழ் உணர்வு, கருத்துப் புரட்சி, மறுமலர்ச்சி தோன்றித் தனித் தமிழ் மலர்வு பெறுகின்றன. ஒவ்வொரு தமிழனும் தமது பழைய வரலாற்றை உணர்கின்றனர்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி என்பதைக் காண்கின்றனர்.

வடக்கே இமயத்தில் கொடி பொறித்து, தெற்கே ஈழத்தில் ஆட்சி அமைத்து, கிழக்கே சிங்கை கடாரம் வென்று, சீனா வரையில் மாட்சிமைப் படுத்தி, மேற்கே உரோமாபுரிவரை காஞ்சியின் பட்டை, மதுரையின் முத்தைக் காட்சிப் படுத்தி, விற்று உலகம் முழுவதும் வாணிபம் செய்து, பரணியில் பரணிபாடிய ஆட்சி வரலாறு — மாட்சிமையான பாடறிந்தொழுகும் பண்பாடு — ஈடும் எடுப்பும் இல்லாத சமரச — சமத்துவ வாழ்வியலைக் கொண்டவர் தமிழர் என்பதைப் புரிகின்றனர்.

### தென்னவன்

வாழ்ந்த தமிழர் வரலாற்றைத் தெரிகின்றனர் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுக் கணியனின் அற்புத தத்துவ வரிகளுக்கு அணியாகின்றனர்.

இலக்கியத்தில் — தத்துவத்தில் — வாழ்வுச் சட்டத்தில் — அறிநெறிக் கோட்பாட்டில், சமயம் சாராத பண்பாட்டுக் கோலத்தில் ஞாலம் போற்றும் பெருமைக்குரிய அருமையான குறளைத் தந்தவர் தமிழர் வள்ளுவர் என்பதை அறிகின்றனர்.

ஆண்ட இனம் ஆளப்படக் கூடாது; அடிமை விலங்கொடிக்கப்பட வேண்டும் என்பதை உணர்கின்றனர்.

இத்தனை விழிப்புக்கும் எழுச்சிக்கும் காரணமானவர் பேரறிஞர் அண்ணா அவர்களே. இருபதாம் நூற்றாண்டின் ஈடும் எடுப்புமற்ற — தன்னேரில்லாத் தலைவன் அவர் என்பதை அறைந்திடலாம். மறைந்த தலைவரின் பேச்சால், எழுத்தால் ஒவ்வொரு தமிழனும் பாண்டியன் நெடுஞ்செழியனும், சோழன் கிள்ளிவளவனும், சேரன் செங்குட்டுவனும் ஆகினர். தமிழன் தலை நிமிர்ந்தான்; தன்னிலை உணர்ந்தான்; உறுதியுடன் இந்நாட்டிலும் தன்னுரிமை நாட்ட முந்துகின்றான். இன்னும் அண்ணாவின் எழுச்சிக்கனல் தமிழரைமேலும் உந்தட்டும்.


## நன்றி நவில்கின்றோம்



**அமரர் சின்னத்தம்பி விஸ்வலிங்கம்**

27 - 12 - 1997 அன்று காலமான எமது குடும்பத்தலைவரின் மறைவை ஒட்டி நேரில் வந்தும், அஞ்சல் மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும், அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்த அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வி. பாலசிங்கம், வி. ரவிராஜ்,
வி. மோகன்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(சி/2778)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

Olivetti Portable Typa writer English விற்பனைக்குண்டு. தொடர்பு:- பி.ப 12 - 1 மணிவரை மட்டும். 186 / 22, குருநாதர் வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [53037]

6சிறி Peugeot (பேஜோ) 404 கார் உடன் விற்பனைக்குண்டு. 15/14 A, சங்கிலியன் வீதி, நல்லூர். (53051)

**வினாத்தாள்**

01 - 02 - 98 இல் நடைபெற்ற 13 வது புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம். Bond, யாழ். நகர். [53039]


## தபாற் பெட்டி

அரியாலை பெப். 3

கொழும்புத்துறை சுணக்கர் சந்திக்கு அண்மையில் ஐயர் கடைக்கு முன்னால் உள்ள தபால் பெட்டி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

மக்கள் இந்த தபாற் பெட்டியில் தபால்களை போடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-17)

## இஞ்சி விலை வீழ்ச்சி

அரியாலை பெப். 3

யாழ். நகரில் இஞ்சியின் விலை குறைந்துள்ளது.

ஒரு கிலோ இஞ்சி தற்போது 250 ரூபாவாக விற்கப்படுகின்றது. (இ-17)


**ரெறாசோ ஷிப்ஸ் (Terrazzo Chips)**

★ கலர் பவுடர் (Pigments) [Holland and Germany]

★ வெள்ளை சிமெந்து (Asano)

★ கதவுப் பூட்டுகள் (Union English) (Direct Importers)

**றம்சன்ஸ்**

இல: 443
பழைய சோனகத்தெரு
கொழும்பு - 12

தொலைபேசி:
431511, 434411

**The Express Institute**
IRUPALAI KOPAY

**1998 புலமைப்பரிசில் பரீட்சைக்கான**
**பயிற்சிப் பரீட்சைகளும், பயிற்சி வகுப்புகளும்**

**II வது பிரிவு**
**பெப். 04-ல் ஆரம்பம்**

1997 மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த எமது நிறுவனத்தின் 60 வீதமான மாணவர்களையும் அதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களையும் பாராட்டுவதில் பெருமையடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

[53032]


## கோழிக் கூட்டு முகாம் அகதிகள் பூந்தோட்டத்துக்கு மாற்றம்


வவுனியா, பெப். 3

கடந்த 13 ஆம் திகதி வன்னியில் இருந்து உயிலங்குளம் ஊடாக வந்து வவுனியா நகரப்பகுதியில் உள்ள கோழிக் கூட்டு அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த அகதிகளில் ஒருபகுதியினர் பூந்தோட்டம் அகதி முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் தற்காலிக கூடாரங்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம்— பூந்தோட்டம் அகதி முகாமில் உள்ள சகலரும் வீடியோப் படம் எடுக்கப்பட்டனர். (இ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 06 | 05 |
| 04 | 01 |
| 1928 | 1998 |

**அமரர் இராஜரட்ணம் அருளானந்தன்**
[ஓய்வு பெற்ற எழுதுனர், பொலீஸ் திணைக்களம் யாழ்ப்பாணம்]

குடும்பத்தின் ஒளி விளக்காய், அன்பின் உறைவிடமாய், சிறந்த பண்பாளனாய் எல்லோருடனும் பழகி கடந்த 05-01-98இல் எங்களை மீளாத்துயரில் ஆழ்த்தி இவ்வுலக வாழ்வை நீத்து இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவன் இராஜரட்ணம் - அருளானந்தன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இன்று (03–02–98) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்!

82/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (53027)

## முதலாண்டு நினைவஞ்சலி



**ஸ்ரீமதி யோகமலர் துரைராஜா (குஞ்சு)**

மண்ணில்: 09 – 06 – 1949
விண்ணில்: 15 – 01 – 1997

உற்ற துணையாய், உயிர்க்குயிராய்
பெற்றனை, வளர்த்தனை, பேறுதந்தனையே!
இறைவன் திருவடி இனிதே வாழ்க!

கணவன், பிள்ளைகள்,
வதிரி. (53040)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 30 | 04 |
| 07 | 01 |
| 1951 | 1998 |

**திருமதி கமலபாரதி சரவணமுத்து**

1998-01-04 ஆந் திகதியன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தெய்வமாக விளங்கியவரும் யாழ். கல்வித் திணைக்களம் — வலயம் 1 இல் பொது எழுதுநர் சேவை, தரம் 1 எழுதுநராகச் சேவையாற்றியவருமான திருமதி கமலபாரதி சரவணமுத்து அவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், உற்றார், உறவினர்கள், மனர் வளையம் சாத்தியவர்கள், கண்ணீரஞ்சலி செலுத்தியவர்கள், அஞ்சலி உரையாற்றியவர்கள், இறுதிக் கிரியைச் செலவுகளைப் பொறுப்பேற்ற யாழ். கல்வித்திணைக்கள அலுவலர்கள் நிதி உதவி வழங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விச்சமுகத்தினர் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்கள் அனைவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அவரின் இழப்பு எமது குடும்பத்திற்கு மட்டுமல்லாது, கல்வித் திணைக்களத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள்.

18, செம்மணி வீதி,
நல்லூர். (53044)

## முதலாம் வருட நினைவு 5 ஆம் வருட நினைவு





**திருமதி கபிரியேற்பிள்ளை மேரி கிளாறா (றஞ்சிதம்)**

பிறப்பு: 02 - 09 - 1946
இறப்பு: 03 - 02 - 1997

**திரு. P. கபிரியேற்பிள்ளை**

பிறந்த தினம்: 02 - 02 - 1936
இறந்த தினம்: 14 - 06 - 1993

அன்பு அப்பா, அம்மா எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளங்களில் இருந்து மாறாது.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

NO 40, 5 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (53036)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்குத் தடையாக இருந்தால் புலிகள் மீதான தடையை நீக்கிடுக

## கூட்டணித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, பெப். 3

'விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள தடையானது, இருதரப்புப் பேச்சுவார்த்தைக்கு பாதகமாக அமையுமானால் அந்தத்தடை உடனடியாக நீக்கப்பட வேண்டும்.''

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் கூறியதாக ஐ. பி. சி. வானொலி தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் மிகச் சுலபமாக தமது கட்சி பெற்ற வெற்றி மூலம் தமது கட்சிக்கு தமிழ் மக்கள் மத்தியில் நியாயமான ஆதரவு உண்டு என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ளவேண்டும்.

எனவே எமது கட்சியின் நிலைப்பாடுகளை அரசாங்கம் புறக்கணிக்க முடியாது.

நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் யாழ். மக்கள் எமக்கு அளித்த அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டே விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்க வேண்டும் என்று நாம் கோருகிறோம்.

அதுமட்டுமன்றி அரசாங்கமும், புலிகளும் பேசுவதன் மூலமே உண்மையான சமாதானம் ஏற்படும் என்றுசகல கட்சிகளும் கருத்துத் தெரிவித்த நிலையில், தற்போதைய அப்படியான பேச்சுக்கு பாதகமாக இந்தத் தடை அமையுமானதால் அது உடனடியாக நீக்கப்பட வேண்டும் — என்றார் கூட்டணித் தலைவர் (இ-3)

## இடையில் நிறுத்தப்பட்ட வீதித் திருத்த வேலைகள்

நவாலி, பெப். 3

நவாலி பிரதான வீதியின் திருத்த வேலைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டைச் சந்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த வீதியின் திருத்த வேலைகள் தற்போது நவாலி தேவாலயத்துக்கு சமீபமாக முடிவடைந்துள்ளன.

மேற்கொண்டு திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும்—

இதன் காரணமாக மணல், கல், தார் என்பன வழங்கப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. (இ-100)

## கப்பலில் வந்த பொருள்கள்: விநியோகம் குறித்து அறிவுறுத்து

அரியாலை, பெப். 3

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் கூட்டுறவு சமாசத்துக்கு கப்பலில் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்கள் மக்களை சென்றடைவதற்கு சங்கங்களின் கிளைக் குழுக்கள் சங்க நிர்வாகிகள் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று சமாசத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் கேட்டுள்ளார்.

கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்கள் சங்கங்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

சமாசத்தினால் அறிவிக்கப்பட்ட விலைக்கே சங்கங்கள் பொருள்களை மக்களுக்கு விநியோகிக்க வேண்டும்.

இப் பொருள்களை இளை முகாமையாளர்கள் வெளிச் சந்தை விற்பனையாளர்களுக்கு வழங்கினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சிவஞானம் தெரிவித்தார். (இ-17)

## யாழ். மாணவர்களின் வெட்டுப்புள்ளியில் மாற்றம் செய்யுமாறு கோரிக்கை

யாழ். மாவட்ட மாணவர்களின் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகள், பல்கலைக்கழக அனுமதி என்பவற்றில் கடந்த சில வருட காலமாக தொடர்ச்சியான வீழ்ச்சி இருந்து வருவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புள்ளி விவரங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்—

இதனடிப்படையில் வட பகுதி மாணவர்களை பல்கலைக் கழகங்கள் அதிக அளவில் உள்வாங்கும் பொருட்டு வெட்டுப் புள்ளியில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் —

கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சோ. சந்திரசேகரம் கோரியுள்ளார். [இ-3]

## மின்மாற்றிகள் சேதம்

கொழும்பு, பெப். 3

காத்தான்குடி கர்பலா பகுதியில் இரண்டு மின்மாற்றிகள் இனந்தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டன.

அதனால் அப்பகுதிக்கான மின்விநியோகம் பாதிக்கப்பட்டது. (இ-3)

## இராஜகோபுரமும் மணிமண்டபமும்

யாழ்ப்பாணம், பெப். 3

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலில் இராஜ கோபுரமும், மணிமண்டபமும் அமைக்கப்பட்டு வருகின்றன.

20 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் இந்தப் பணி எதிர்வரும் மே மாதம் பூர்த்தியடையும் எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## வருடாந்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 3

வல்வெட்டித்துறை கம்பர்மலை அ. த. க. பாடசாலை பழைய மாணவர் சங்க வருடாந்த கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை அரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [இ-4]

## நூல் நிலையம்

தென்மராட்சி, பெப். 3

கச்சாய் விநோபா நகரப் பகுதி மக்களால் நிர்மாணிக்கப்பட்ட விநோபா நூல் நிலையம் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் திறந்து வைக்கப்பட்டது.

இப் பகுதி மக்களாலும் ஏனைய நலன் விரும்பிகளாலும் வழங்கப்பட்டமூவாயிரம் புத்தகங்கள் இந் நூல் நிலையத்தில் உள்ளன.

(இ-117)

## கோரிக்கை

செம்பியன்பற்று, பெப். 3

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள மக்கள் தமக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணப் பொருள்களை பாதுகாப்பு அரணுக்கு வெளியில் உள்ள கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் வழங்குமாறு கோரி வருகின்றனர்.

(இ-36)


# UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

The Chairman, tender board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with ICTAD for Civil Engineering works or from Multi Purpose Co-operative Societies for the construction of "Boundary wall along the Western boundary of Sports Complex"

Tender forms may be obtained from the Works Engineer (civil), University of Jaffna until 13 - 2 - 1998 on producing Registration book and cash payment of the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit - Rs. 24, 500
2. Non-refundable deposit - Rs. 500

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box, kept at the Registrar's office, University of Jaffna on or before 26 - 02 - 98 at 10. 00 a. m

Tender forms may be seen by the tenderers at the Maintenance branch of this University during office hours if necessary.

Dr. K. Kunarasa
Registrar

University of Jaffna,
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna.

(C/2777)



# அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட இரண்டாம் வருட ''B'' பிரிவு மாணவர்களுக்கான கலந்துரையாடல் 05 - 02 - 98 அன்று 11. 00 மணியளவில் மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது. மாணவர்கள் தவறாது கலந்து கொள்ளவும்.

2 ஆம் வருட மாணவர் பிரதிநிதி
விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்,

[இ/2784]



# பாராட்டுகிறோம்

யா/கம்பர்மலை அ. த. க. பாடசாலை
வல்வெட்டித்துறை

1997 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த,

செல்வன் சேகரானந்தம் நிறோஜ்
செல்வன் சிவபாதகுணம் பிரசாந்
செல்வன் சந்திரசேகரம் அருண்நேரு

ஆகிய மாணவர்களையும் அவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர், பெற்றோர்களையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/கம்பர்மலை அ. த. க. பாடசாலை.
(53055)



யா/ மானிப்பாய்
சென்ற். ஆன்ஸ் றோ. க. த. க. பாடசாலை

1997 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/ சென்ற் ஆன்ஸ் றோ. க. த. க. பாடசாலை மாணவர்களை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

| | | |
|---|---|---|
| R. | லகிகரன் | - 116 புள்ளிகள் |
| J. | றஜீவன் | - 114 புள்ளிகள் |
| N. | கௌதமன் | - 104 புள்ளிகள் |
| N. | அகிலன் | - 102 புள்ளிகள் |
| K. | கணேஷானந்த் | - 102 புள்ளிகள் |

மேற்படி மாணவர்களுக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுகின்றோம்.

பெற்றோர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள்.
(53063) பழைய மாணவர்கள்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

# தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கீழ்வரும் மரத் தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. பக்க ராக்கை | — 15 |
| 2. நிர்வாக உத்தியோகத்தர் மேசை | — 07 |
| 3. லிகிதர் மேசை | — 20 |
| 4. தட்டெழுத்தாளர் ஸ்ரூல் | — 06 |
| 5. தட்டெழுத்தாளர் மேசை | — 02 |
| 6. ஆய்வுகூட ஸ்ரூல் | — 60 |
| 7. ஆய்வுகூட மேசை | — 16 |
| 8. மகாநாட்டு மேசை | — 01 |
| 9. மகாநாட்டு மேசைக் கதிரை | — 25 |
| 10. பேச்சாளர் ஸ்ராண்ட் | — 04 |
| 11. விரிவுரை மண்டப மேசை | — 04 |
| 12. புத்தக ராக்கை | — 02 |
| 13. கைக் கதிரை | — 65 |
| 14. ஆய்வுகூட ராக்கை | — 08 |

01) கேள்விப்பத்திரதாரர் யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர்/வழங்கலுடன் தொடர்பு கொண்டு தளபாடங்களுக்கான படவரைபுகளை பெற்றுக் கொள்ளலாம்.

02) கேள்விப்பத்திரதாரர் மீளளிக்காத வைப்புப் பணமாக 250 ரூபாவையும், மீளளிக்கும் வைப்புப்பணமாக ரூபா 750 உம் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் கேள்விப்பத்திரங்களை 16 - 02 - 1998 காலை 10. 00 மணிக்கு முன்னர் உதவி நிதியாளர் (வழங்கல்) அறையில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில், தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

03) கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் காலை 10. 30 மணிக்கு திறக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் UJ/PO/2/98 என குறிப்பிடல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (இ/2776)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். அனுப்பும் பொருள்களை காலியில்வைத்துஏற்றுமாறுபணிப்பு

கொழும்பு, பெப். 3

யாழ். மாவட்டத்துக்கு கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்படும் சகல பொருள்களும் காலித் துறைமுகத்தில் வைத்தே கப்பலில் ஏற்றப்படவேண்டும் என்று துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த புதிய நடைமுறை நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் என்று அந்த அமைச்சு அறிவித்துள்ள போதிலும், பாதுகாப்பு அமைச்சு இதற்கு இன்னமும் அனுமதி வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நடைமுறையை வாபஸ் பெறுமாறும் பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

இதுவரை காலமும் கொழும்புத் துறைமுகத்தில் வைத்தே யாழ்ப்பாணத்துக்கான பொருள்கள் கப்பலில் ஏற்றப்பட்டன.

கொழும்புத்துறை முகத்தின் எலிஸபெத் துறை புனரமைப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டதாலேயே புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு புதிய நடைமுறையை அறிவித்தது. (இ-8)

## பெண்களுக்கும் மாணவருக்கும் அறப்பணியகம் உதவி

நவாலி, பெப். 3

நவாலியிலுள்ள ஊன்று கோல் அறப்பணியகம் உழைப்பாளிகளை இழந்த பெண்களுக்கும், 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் பண அன்பளிப்புகளை வழங்கியது.

அமரர் செல்லையா ஞாபகார்த்தமாக அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப் பணியகத்தின் அதன் இயக்குநர் செ. மகேந்திரன் தலைமையில் இவ் வைபவம் இடம்பெற்றது.

இதில் நவாலி சென். பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலையின் அதிபர் சிறில் சுகந்தரன், கொழும்பு வை.எம்.சி.ஏ. உறுப்பினர் விஜயகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன் வன்செயல்களின் போது உழைப்பாளிகளை இழந்து அடிப்படை வசதிகளற்றிருக்கும் 10 பெண்களுக்கும், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த சென். பீற்றேஸ் பாடசாலையைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கும் பணஉதவிகளை வழங்கினார்கள். (இ-100)

## அறுவடை வேலைக்கு கூலியாள் இல்லை

நவாலி ஆனைக்கோட்டை வழுக்கையாறு பகுதி வயல்களில் நெல் அறுவடை வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கூலியாட்கள் தட்டுப்பாடு காரணமாக நெல் அறுவடை செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (இ-100)

## பாடசாலைகளை திறக்க முயற்சி

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு, மெலிஞ்சி முனை, செட்டிபுலம் பகுதிகளில் உள்ள பாடசாலைகளை திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (இ-111)

பளை ஆஸ்பத்திரியில்

## தினமும் 90 பேர் வரை மலேரியாவுக்கு சிகிச்சை

பளை அரசினர் வைத்திய சாலையில் தினமும் 90 பேர் வரை மலேரியா நோய்க்கான சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த வைத்திய சாலையில் மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் மின்சார வசதி மற்றும் குளிர்சாதன வசதிகளில்லாமையினால் மருந்துப் பொருள்களை பாதுகாக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சிப் பகுதியில் மூளை மலேரியாவினால் கடந்த இருவாரங்களில் மட்டும் 15 பேர் மரணமடைந்துள்ளனர்.

இப்பகுதியில் மலேரியா நோய் தீவிரமாகப்பரவி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மாவிட்டபுரத்தில் தைப்பூசம்

யாழ்ப்பாணம், பெப். 3

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை தைப்பூச ஆராதனை வைபவம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்று நடைபெறும் ஆராதனைகளில் பங்குபற்றி பிரார்த்தனை, வழிபாடுகள் ஆகியவற்றில் ஈடுபட விரும்புபவர்கள் பாதுகாப்பாக சென்று வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

அங்கு செல்லவிருப்புபவர்கள் தங்கள் பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை மல்லாகத்தில் இருக்கும் மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதர் குருக்களிடம் நாளை புதன்கிழமைக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மல்லாகத்தில் இருந்து மாவிட்டபுரம் போய்வரவும் பயண வசதிகள்செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)


## கணிப்பீடு

நெடுந்தீவு, பெப் 3

மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை உயர் நிலைக்குக் கொண்டு வரும் பொருட்டு தீவுப்பகுதியில் உள்ள ஆண்டு ஆறு மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் கணிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. (இ-111)

# குருநகர் புதுமை மாதா தேவாலய மரியன்னை விழாச் சிறப்பு மலர்

03-02-1998



## ஆலய வரலாறு

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் யாழ். கொட்டடிப் பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்க மக்கள் அக்காலத்தில் சிறிய காட்டுப் பகுதியாக விளங்கிய குருநகர்ப் பகுதியில் மறைவாக ஒரு சிறிய கொட்டில் ஆலயத்தை புதுமை மாதா பெயரில் அமைந்தார்கள்.

★ 1887 ஆம் ஆண்டு ஆலயத்தின் முகப்பு கட்டிமுடிக்கப்பட்டது.

★ 1910 ஆம் ஆண்டில் குருநகர் புதுமை மாதா ஆலயத்தின கூரை, சுவர்கள, தூண்கள் திருத்தி அமைக்கப்பட்டன.

★ 1912 ஆம் ஆண்டு ஆலயத்தின் பின் பகுதியில் குருக்கள தங்குவதற்கேற்ற அறை அமைக்கப்பட்டது.

★ 1915 ஆம் ஆண்டு ஆலயத்திற்கான சிமெந்து நிலம் அமைக்கப்பட்டது.

1966 ஆம் ஆண்டு அருட்திரு மோரிக்கோல் அ.ம.தி. பங்குத் தந்தையாக இருந்த காலத்தில் ஆலயத்திற்கு "போட்டிகோ" கட்டப்பட்டது.

★ இவ்வாலயம் தொடர்பான பல குறிப்புக்கள் சுவாமி ஞானப்பிரகாசரின் ஆங்கில நூலில் காணப்படுகின்றன.

(மலர் தயாரிப்பு குருநகர் செய்தியாளர் எம். ஜி எஸ்)

## குரு முதல்வர் வாழ்த்து

யாழ். நகர் வாழ் கத்தோலிக்க மக்கள் அனைவரும் அன்போடும், நம்பிக்கையோடும் நாடி வரும் குருநகர் புதுமை மாதா ஆலய விழா எமது மறைமாவட்டத்திலேயே ஒரு சிறப்பு நிகழ்வாகும். வரலாற்றுத் தொன்மை மிக்க இவ்வாலயத்தில் முன்பு வைக்கப்பட்டிருந்த புதுமைமிக்க திருச்சொரூபம் இப்பொழுது கோவாப் பட்டினத்திலே பெருமையாகப் பூசிக்கப்பட்டு வருகிறது.

என்றும் தனது பரிந்துரையை நாடிவரும் பக்தர்கள் மனமுடைந்து போகா வண்ணம் இறையருளை பரிந்துரைத்துப் பெற்றுத் தரும் எம் அன்னை, போரின் கொடுமையால் நலிந்து ஏக்கப் பெருமூச்சுக்களோடு அவளது திருப்பாதம் நாடுவோரைத் தொடர்ந்தும் தேற்றுவாள் என்பதே எமது நம்பிக்கை.

அன்னையின் இவ்விழாவில் ஆலய மக்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருட்திரு
எம். செல்வராஜா
யாழ். மறைக்கோட்ட
குரு முதல்வர்

## யாழ். ஆயரின் ஆசி

உலக மீற்பராகிய யேசுகிறிஸ்துவை பெற்றெடுத்து யூதமத சட்டங்களின் படி அவரை ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்த மரியன்னையின் விழா புதுமை மாதா ஆலயத்தில் மாசி 3 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இவ்வாலயத்தில் மரியன்னையின் பக்தர்கள் திரளாகக் கூடி திருநாள் வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர். இத்தருணத்தில் நாட்டில் நடைபெறும் கொடிய யுத்தத்தினால் அல்லற்படும் மக்களுக்காக மரியன்னையின் பலம் மிக்க பரிந்துரையை இரந்து வேண்டுகின்றோம்.

அதி வந். தோமஸ் சௌந்தரநாயகம்
யாழ்.ஆயர்.

## பங்குத் தந்தை ஆசி

யாழ் பரிசுத்த புதுமை மாதா கோயில் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை (3 2-98 இல்) சிறப்பாக நடைபெறுகின்றது இக்கோயில் நூற்றுப்பதினொரு வருடங்களாகச் சரித்திரப் பிரசித்தி பெற்ற பாரம் பரியம்மிக்கதாகும்.

புதுவருடத்திலும் திருமணநாள், பிறந்தநாள், பாடசாலை ஆரம்ப நாள், முதல் உணவூட்டும்நாள் ஆகிய விசேட நாள்களில் மக்கள் இந்தமாதாவின் ஆசி வேண்டிச் செல்வதை நான் இங்குவந்து. பணிபுரியும் இரண்டு மாதகாலத்திற்குள் காண கூடியதாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் திரள் திரளாக கூடி வரும் காட்சி மகிழ்ச்சிதருவதாகும்.

இந்தப் போர்க்கால இருண்ட யுகத்தில் மக்கள் விரும்பும் சமாதானம், சுபீட்சம், கிறிஸ்தவ மதிப்பீடுகள் நிறைந்த ஓர் ஒளிமயமான வாழ்க்கையை நிச்சயம் இந்த அன்னை தன்மகன் இயேசுவிடம் இந்து கேட்டுக் கொடுப்பாரென ஆசிக்கின்றேன்.

அருட்திரு பி. எவ். பொனிவேஸ்
பங்குத்தந்தை, குருநகர்.


### வாழ்த்துக்கள வழங்கியோர்

எஸ். எம். பெர்னான்டோ
கண்ணாடி வழங்குபவர்கள்
580, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி அருகில்)

பி. ஜெ. பர்னான்டோ
மூக்குக் கண்ணாடியகம்
பல்கட்டும் நிலையம்
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிறிஸ்ரியன் சிலுவைதாசன்
(ஜே. பி) குடும்பத்தினர்
13A, மத்திய கிழக்கு வீதி,
றெக்ளமேசன்,
யாழ்ப்பாணம்.

குருநகர் சிறகுவலைச் சங்கம்
2, மத்திய கிழக்கு வீதி,
றெக்ளமேசன
யாழ்ப்பாணம்.

குருநகர் ஐக்கிய கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கம்
கடற்கரை வீதி, குருநகர்.

நியூ கமல் செரமிக்ஸ்
37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கபிரியேல் வைத்தியசாலை
டாக்டர் ஜி எட்வேட்
கடற்கரை வீதி, குருநகர்.

டாக்டர் சி. இராசரத்தினம்
2ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

வெயின் ஸ்ரோர்
உரிமையாளர்- ஜே. நொயல்
தண்ணீர்த் தாங்கி வீதி,
குருநகர்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்
கடற்கரை வீதி, குருநகர்

சிவலிங்கம் வைத்தியசாலை
டாக்டர் எஸ். ஸ்ரீஜீவகன்
9/6, 4ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

செ. மரியதீலன்
ஜே. அன்ரன்
குருநகர்.

அமரோ போட்டோ
குருநகர்
வேலணை வைத்தியர்

விளம்பரதாரர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்
க. அருள்நேசன்
செயலாளர்,
புதுமை மாதா ச. ச. நிலையம்
குருநகர். (53048)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

## அமைதிக்குப் பதிலாக....

இலங்கையின் ஐம்பதாவது சுதந்திர தினம் நாளையாகும். சுதந்திர தினத்துக்கு முன்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான பாதை திறக்கப்பட்டுவிடும் என்றும், கிளிநொச்சியில் இருந்து கண்டிக்குச் சேவையில் ஈடுபடும் பஸ்ஸில் வடபகுதியைச் சேர்ந்த மக்கள் சுதந்திரதின விழாவுக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஒரு சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்!

வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் 96 சதவீதமே கைப்பற்றப்பட்டு விட்டதாகக் கூறியே அவர் முன் சொன்ன கணிப்பைச் செய்திருந்தார். அவரின் இந்தக் கணிப்பு வெறும் கற்பனையே என்று இராணுவ உயர் அதிகாரிகளே அப்போது தெரிவித்தனர்.

'வெற்றி உறுதி' என்ற இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டு பத்து மாதங்கள் கழிந்த காலத்தில், அமைச்சர் ரத்வத்த இவ்வாறு பல கால அவகாசங்களை — கால அட்டவணைகளை — வகுத்திருந்த போதிலும் இலக்கு எய்தப்படவில்லை என்பது அனுபவம்.

குடாநாட்டுக்கான தரைவழிப் பாதை திறக்கப்படுமாயின் போர் ஓரளவுக்கேனும் தணிந்துவிடும் என்றும் சில தரப்பினர் எதிர்பார்த்தனர். ஆயினும் போர் தொடர்வதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. விடுதலைப் புலிகள் கண்டியில் தலதா மாளிகை மீது நடத்திய தாக்குதலும், கிளிநொச்சியில் தொடங்கியுள்ள தாக்குதலும் போர் தொடரும் என்பதனைக் காட்டும் சம்பவங்களே!

சுதந்திரப் பொன் விழாவைக் கோலாகலமாகக் கொண்டாட விரும்பிய அரசு அதற்கு முன்னர் நாட்டில் அமைதியை நிலைநாட்ட முயன்றிருக்கவேண்டும்.

அதன் பொருட்டு போரை நிறுத்து முகமாக சமாதான வழியில் அரசியல் பேச்சுக்கள் நடத்தி அமைதி நிலையைத் தோற்றுவித்திருக்கலாம். அதற்கான முயற்சிகளை இதய சுத்தியுடன் மேற்கொண்டிருக்கலாம். ஆனால் அரசு அவ்வாறு சிந்திக்கவில்லை.

தலதா மாளிகை தாக்குதலின் பின்னர், இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்ற கோபாவேசத்துடன், சிங்கள மக்களைத் திருப்திப் படுத்தும் எண்ணத்துடன் விடுதலைப் புலிகளைத் தடை செய்வதாக அரசு அறிவித்தது.

அந்தத் தடையினால் போரை முடிவுக்குக் கொண்டுவந்து அமைதிச் சூழலை உருவாக்க முடியாது என்பது சிறுவருக்கும் தெரிந்த விடயம். தடை அறிவிப்பு வந்ததன் பின்னர் கிளிநொச்சியில் மூண்டுள்ள கடும் சண்டை அதனையே எடுத்துக் காட்டுகிறது.

இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் பெரும்பான்மையினரான சிங்கள மக்களுக்கு மட்டுமே சுதந்திர வாழ்வுக்கு வழி செய்தது என்பதில் தவறில்லை; மிகையுமில்லை. ஆகையால் அது கிடைத்த பொன் விழாவை அமைதியான சூழ்நிலையில் கொண்டாடுவதற்கான உகந்த அணுகு முறையை அரசு கைக்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொண்டு அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்துகொண்டு சுதந்திர தின விழாவைக் கொண்டாடும் வழியையே அரசு நாடியது. அதனால் வடக்கு — கிழக்கில் மட்டுமன்றி மத்தி, தெற்கு, மேற்கு என்று நாட்டின் எல்லா இடங்களிலுமே— திசைகளிலுமே போர் முனைகள் திறக்கப்பட்டுள்ள நிலை தோன்றியுள்ளது.

அதனால் சுதந்திரதின விழா மதற்ற உணர்வுடன், அமைதி யற்ற சூழ்நிலையிலேயே நடைபெறவுள்ளது.

# மேலும் 55 ஆயிரம் குடும்பங்களுக்கு ரூபா 5 ஆயிரம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். மாவட்டத்தில் மேலும் 55 ஆயிரம் குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணமான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் எஸ். சண்முகநாதன் மேற்கொண்டுள்ளார்.

கடந்த வருடம் 56 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 46 ஆயிரம் குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு அது வழங்கப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)

## நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், பெப். 3

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் வீதியில் அமைந்துள்ள நல்லூர் வடக்கு சனசமூகநிலையத்தில் வைத்து இன்று செவ்வாய்க்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி போடப்படும்.

முற்பகல் 11.30 மணி முதல் 12.30 மணி வரை கால்நடை வைத்தியப் பகுதியினரால் தடுப்பு ஊசி ஏற்றப்படவுள்ளதால் தமது வளர்ப்பு நாய்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் தவறாது தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு பிரதேச மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(ஐ)

★ ★ ★

நவாலியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் பின்வரும் இடங்களில் வைத்து நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நவாலி தெற்கு மதி ஒளி சனசமூக நிலையம், நவாலி வை. எம். சி. ஏ. மண்டபம், நவாலி கொத்துக்கட்டி ஆகிய இடங்களிலேயே இத்தடை மருந்து ஏற்றப்படும்.

(ஐ-100)

## யாழ். நீதிபதியாக பாலச்சந்திரன் பதவியேற்பு

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். மாவட்ட நீதிபதியாகவும், நீதிவானாகவும் பாலசுப்பிரமணியம் பாலச்சந்திரன் நேற்று மல்லாகம் நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிவானாக கடமையாற்றிய இவர் இனிமேல் யாழ். மாவட்ட நீதிபதியாகவும், நீதிவானாகவும், குடும்ப நீதிவானாகவும், ஊர்காவற்றுறை நீதிவானாகவும் சாவகச்சேரி, மல்லாகம் மாவட்ட மேலதிக நீதிபதியாகவும் கடமையாற்றுவார்.

(ஐ 5-8)

## விளையாட்டு நிகழ்வு

மல்லாகம், பெப். 3

நல்லூர் பிரதேச செயலகம் அப்பகுதி விளையாட்டுக் கழகங்களிடையே நடத்தும் சுரப்பந்தாட்டப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை அரியாலை காந்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் மோதவுள்ள அணிகள் விவரம் வருமாறு:

★ நல்லூர் ஞானவைரவர் வி. க. அணி எதிர் திருநெல்வேலி இந்து வாலிபர் வி.க. அணி

★ நல்லூர் ஐக்கிய வி. க. அணி எதிர் கோண்டாவில் வாகீஸ் வி. க. அணி

★ நல்லூர் நொதேர்ண் வி. க. அணி எதிர் ஆத்திசூடி கலைமகள் வி. க. அணி

(ஐ-86)

## வீதி விபத்தில் 2 படையினர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். நகரப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் காயமடைந்த இரு படையினர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இரு படையினரும் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் கார் ஒன்றுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-ரீ)

# செம்மணி வீதியூடாகச் செல்ல அனுமதிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். நகரப் பகுதியில் இருந்து தென்மராட்சி செல்லும் மக்கள் செம்மணி வீதி ஊடாக நாவற்குழிப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

ஈ. பி. ஆர். எல். எப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் யாழ். நகரத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

நேற்று நகர தளபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்திய சமயம் அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

நாயன்மார்கட்டுப்பகுதியில் இருந்து நாவற்குழிவரை சென்று கண்டிவீதியில் இணையும் செம்மணி வீதி தற்போது போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளது.

அப்பாதையை விரைவில் திறந்து மக்கள் போக்குவரத்துச் செய்ய அனுமதிப்பதாக பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை - குருநகர் பகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் சுரேஷ் பிரேமச்சந்திரன் பிரிகேடியரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்

கடந்த 28 ஆம் திகதி இரவு குருநகர்ப் பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து கடற்றொழிலில் ஈடுபடுவதில் அப்பகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் பிரிகேடியருக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் எடுத்துக் கூறினார்.

(ஐ)

# தற்கொலைக்கு முயன்ற இரு பெண்கள் நீதிமன்றில்

யாழ்ப்பாணம், பெப்.3

வறுமை காரணமாகத் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இரு பெண்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த பூலோகநாதன் ரஜித்தா, கன்னாகத்தைச் சேர்ந்த யோகராஜா சுகந்தினி ஆகிய இருவருமே அலரி விதை உண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் ஆறுமாத கால நன்னடத்தைப் பிணையுடன் இரண்டாயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். மற்றைய நபர் ஆறு மாத கால நன்னடத்தைப் பிணையுடன் ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இவர்களது வறுமை நிலை குறித்து சமூக சேவைத் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிபதி பணிப்புரை விடுத்தார்.

(ஐ-5-9)

## நாளை

தை 22

புதன்கிழமை

திதி: அட்டமி

முன்இரவு 7.51 வரை.

நட்சத்திரம்: பரணி

மாலை 6.00 வரை.

கார்த்திகை விரதம்

சுபநேரம்: 5 05 - 6 35

ராகுகாலம்: 12.35-2.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்திரசிச்சை...

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் போதிய வைத்தியத்துறை விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் இல்லாமல் கடும் பற்றாக்குறை நிலவியபோது பல மட்டங்கள் மூலம் இவருடன் தொடர்பு ஏற்படுத்தி இவரை யாழ்ப்பாணம் வரவழைக்க தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டன.

டாக்டர் குணானந்தனும் வெளிநாட்டில் தமக்குக் கிடைத்த வருமானம், பதவி, பட்டங்கள், எதிர்கால வாய்ப்புகள் ஆகியவற்றைத் துறந்து தமது குடும்பத்தவரை அங்கு விட்டு விட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியராகப் பணியாற்ற வந்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை நிபுணர்களுக்கு என ஒதுக்கப்பட்ட அறையில் தங்கியிருந்து தினசரி காலை 6 மணி முதல் நள்ளிரவு வரை தொடர்ந்து ஓய்வின்றி கடந்த சில மாதங்களாக அவர் பணியாற்றி வந்ததாக மருத்துவ மாணவர்கள் கூறுகின்றனர்.

அண்மையில் அவர் லீவில் கொழும்பு சென்ற சமயம் அவரின் தங்கும் அறையின் கதவுப் பூட்டு உடைக்கப்பட்டு, அந்த அறை, ஆஸ்பத்திரி நிர்வாகத்தினால் வேறு ஒரு டாக்டருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

நேற்று லீவு முடிந்து தமது பயணப் பைகளுடன் யாழ். ஆஸ்பத்திரி திரும்பிய சத்திர சிகிச்சை நிபுணர் குணானந்தன் அதிர்ச்சியும் வேதனையும் ஆச்சரியமுமடைந்தார். அது பற்றிக் கேட்பதற்காக ஆஸ்பத்திரியின் பதில் பணிப்பாளரைத் தேடி, பணிப்பாளர் அறைக்கு அவர் சென்றார். அங்கு அவர் கேவலமாக நடத்தப்பட்டதுடன் ஆஸ்பத்திரிக்கு வெளியே வேறு இடத்தைப் பார்க்கும்படி கேட்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

பதில் பணிப்பாளரின் நடவடிக்கையால் குழம்பிய டாக்டர் குணானந்தன், தமது பயணப்பையை அந்தப் பணிப்பாளர் அறையில் வைத்து விட்டு அங்கிருந்து வெளியேற மாட்டேன் என்று அஹிம்சைப் போர் ஒன்றை ஆரம்பித்தார். அவரை அறையை விட்டு வெளியே போகுமாறு ஏசிய பதில் பணிப்பாளர், அவர் அதற்கு மறுக்கவே நீண்ட நேரம் பார்த்திருந்துவிட்டு தமது அறையின் கதவைப் பூட்டாமலேயே நேற்று மாலை வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

இது பற்றிய தகவல்களை அறிந்த மருத்துவபீட மாணவர்கள் அங்கு திரண்டனர். தமது பேராசிரியர் கீழ்த்தரமாக நடத்தப்பட்டதை ஆட்சேபித்து அவர்கள் மத்தியில் பதற்றம் கலந்த கோபம் எழுந்ததை அவதானிக்க முடிந்தது.

ஆனால் சம்பவம் குறித்து கேள்விப்பட்ட யாழ். நகரின் 512 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் மெண்டிஸ் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார். அங்கு அவர் சென்ற சமயம் பதில் பணிப்பாளரோ ஆஸ்பத்திரி அதிகாரிகளோ இருக்கவில்லை. டாக்டர் குணானந்தன் மட்டும் தமது பயணப் பொதிகளுடன் — உடுப்புக் கூட மாற்றாமல் — வந்திறங்கிய நேரம் முதல் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் — குந்தி இருந்ததைக் கண்டார்.

பிரிகேடியர் மெண்டிஸ் மருத்துவமாணவர்களுடனும் பேராசிரியர் குணானந்தனுடனும் ஏனைய டாக்டர்களுடனும் பேச்சு நடத்தினார்.

நாளை (இன்று) ஒருநாளுக்குள் இப்பிரச்சினைக்கு தாம் சுமுகத் தீர்வு காண்பதாகவும் —

அதுவரை டாக்டர் குணானந்தன் தமது அஹிம்சைப் போராட்டத்தைக் கைவிட்டு ஒத்துழைக்க வேண்டும் எனவும் —

பிரிகேடியர் மெண்டிஸ் கோரினார். அவரின் கோரிக்கையை ஏற்று மற்றொரு டாக்டருடன் ஆஸ்பத்திரிக்கு வெளியே நேற்றுமட்டும் ஒரு நாள் தங்குவதற்கு டாக்டர் குணானந்தன் இணங்கிப் புறப்பட்டுச் சென்றார்.

ஒரு நாளின் இருபது மணித்தியாலத்தை நோயாளிகளுக்காகச் செலவிடத் தயாராக இருக்கும் —பிரபலமான — முக்கிய நரம்பியல் சத்திர சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த ஒரேயொரு — நிபுணரின் சேவையைக் கூட சரிவரப் பெற்று, யாழ். மக்களுக்கு வழங்க முடியாத குழப்ப நிலையில் யாழ். போதனா ஆஸ்பத்திரி நிர்வாகம் இருப்பதாக மருத்துவ பீட மாணவர்கள் குற்றம் சுமத்தினர். (உ)

## பலியான.....

(முதலாம் பக்கத் தொடர்)

தாகவும் தெரிய வருகிறது.

மல்லாவியிலிருந்து வரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் கிளிநொச்சிப் பகுதியில் சடலத்தைப் பொறுப்பேற்கும் இடத்துக்கு வந்து சேருவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பதாகத் தொடங்கி —

அவர்கள் சடலத்தைப் பொறுப்பேற்று, புறப்பட்டு ஒரு மணி நேரம் கழியும் வரை —

கிளிநொச்சி — பரந்தன் பகுதியில் சுமார் ஒரு மணி நேரத்துக்கு யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று இராணுவத் தரப்புக் கோரியதாகக் கூறப்படுகின்றது.

வேண்டுமானால் சடலங்கள் ஒப்படைக்கப்படும் பிரதேசம் மற்றும் திசைகளில் மட்டும் அந்த நேரத்துக்கு யுத்தத்தை நிறுத்த புலிகள் இணங்கினர் என்றும் —

இவ்விடயத்தில் இணக்கம் ஏற்படாததை அடுத்து புலிகளின் சடலங்களை ஒப்படைக்கும் முயற்சி இடைநடுவில் கைவிடப்பட்டதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் புலிகளினால் கைப்பற்றப்பட்ட படையினரின் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாக ஒப்படைத்து, வவுனியா மூலம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

(உ)

## 150 புலிகள்...

(முதலாம் பக்கத்தொடர்)
பாணம்.)

★ நிலாந்தன் (துரைராசா நரேந்திரன்—யாழ்ப்பாணம்.)

★ இளங்குமரன் (செல்லையா செல்வக்குமார் — யாழ்ப்பாணம் )

★ மஞ்சுளா (அந்தோனிப்பிள்ளை றொபின்ரா —யாழ்ப்பாணம்.)

★ மணிமேகன் (செல்வராஜா கிருஷ்ணராஜா — மட்டக்களப்பு.)

★ செவ்வழகன் (சின்னத்தம்பி மோகனராசா—மட்டக்களப்பு.)

★ தமிழ்ச்செல்வம் (சந்தையா சுவேந்திரன் —யாழ்ப்பாணம்.)

★ வினோ (தனபாலன் தயாசிலா — வவுனியா.)

★ புகழ்வாணன் (சூரியசேகரம் ரவிசேகரம் — யாழ்ப்பாணம்.)

★ பசுமலை (வைரமுத்து ஜெயகாந்தன் — மட்டக்களப்பு.)

★ வானதி (கந்தையா சுகந்தி — யாழ்ப்பாணம்.)

★ பூமணி (சிவனேசன் தர்சினி — யாழ்ப்பாணம்.)

★ சியான்குமார் (கிருஷ்ணபிள்ளை ஜெயசீலன் — மட்டக்களப்பு.)

★ அகிலாமழன் (அம்பியப்பா நிமலன் — மட்டக்களப்பு.)

★ முழுநிலவன் (வேலாங்கம் தேவராசா — மட்டக்களப்பு.)

★ கரிகாந்தன் (மகேஸ்வரன் உதயராஜா — மட்டக்களப்பு.)

★ மிதுனா (கணபதி நாகராணி — மணலாறு.)

★ தனுஷன் (விஸ்வலிங்கம் செல்வராசா — திருமலை.)

★ வாசன் அல்லது தாரீமீசராஜன் (அழகையா விநாயகமூர்த்தி —மட்டக்களப்பு.)

★ லவன் (அழகையா இளையதம்பி — மட்டக்களப்பு.)

★ ஜசோ (இராசையா சுஜிதா —புத்து வெட்டுவான் கிளிநொச்சி) ஆகிய போராளிகளே களப்பலியானதாக அறிவிக்கப்பட்டது. (ஐ-9)

## கொழும்பு..

(முதலாம் பக்கத் தொடர்)
டடத் தொகுதியும், சுதந்திர தினக் கண்காட்சி நடைபெறும் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபமும், கொழும்பு வர்த்தக மையமும் அதி தீவிரப் பாதுகாப்புப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

முப்படையினருக்கும் மேலதிகமாக ஐயாயிரம் பொலிஸார் கொழும்பில் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். கொங்கிறீட் பாளங்களால் வீதித் தடைகள் போடப்பட்டுள்ளன.

சுதந்திரப் பொன்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதற்காகப் பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் இன்று மதியம் கொழும்பு வந்துசேருவார். இங்கு நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு அவர் நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்குச் செல்வார்.

## புலிகளின்..

(முதலாம் பக்கத் தொடர்)
களின் குரல் வானொலி சேவையைக் கேட்கமுடியும் என்றும் —

வன்னியின் கிழக்குப் பகுதியில் பண்பலையில் 98 அலைவரிசையில் அதனைக் கேட்கலாம் என்றும் "புலிகளின் குரல்" வானொலி நேற்று அறிவித்தது. (ஐ-9)

## கொழும்பில் நாளை ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 3

நாளை கொழும்பில் சுதந்திரதினப் பொன்விழா நடைபெறும் சமயம் அங்கு பெரும்பான்மை இனத்தவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தக் கூடிய வாய்ப்பிருப்பதாக செய்திநிறுவனங்கள் ஒன்று தெரிவித்தது.

பிரிட்டனில் புலிகள் சுதந்திரமாகச் செயற்படவும், நிதி திரட்டவும் அனுமதி அளித்திருப்பதை ஆட்சேபித்து — பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் சுதந்திர தினப் பொன் விழாவில் கலந்து கொள்ள இங்கு வரும்போது — ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தத் திட்டமிடப்படுவதாகக் கூறப்பட்டது. (உ-6)

## ஏறாவூரில் தாக்குதல்!

மட்டக்களப்பு — ஏறாவூர் பகுதியில் படையினரின் முன்னணி நிலைகளின் பதுங்கு குழிகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தியதின் அவர்கள் பின்வாங்கிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-9)

## ராஜினாமா...

(முதலாம் பக்கத் தொடர்)
அளிப்பதற்கு ஏற்பட்ட தாமதம் குறித்துத் தாம் வருந்துவதாகவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி தலதா மாளிகை மீதான தாக்குதலுக்குப் பொறுப்பேற்று பாதுகாப்புப் பிரதியமைச்சர் பதவியில் இருந்து விலகிக்கொள்வதாக அனுருத்த ஜனாதிபதிக்கு இரண்டு பக்க கடிதம் அனுப்பியிருந்தார்—

அவரின் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று ஜனாதிபதி செயலகம் பின்னர் அறிவித்திருந்ததும் தெரிந்ததே. (ஐ-9)

# பாலியல் சிக்கலில் ஆர்தர் சி. கிளார்க்

கொழும்பு, பெப். 3

பிரபல விஞ்ஞான எழுத்தாளர் ஆர்தர் சி. கிளார்க் பாலியல் சிக்கல் ஒன்றில் சிக்குண்டதை அடுத்து அது பற்றிய செய்திகள் பரவலாக வெளியாகத் தொடங்கியுள்ளன.

எண்பது வயதான ஆர்தர் சி. கிளார்க் பிறப்பால் பிரிட்டனைச் சேர்ந்தவர். நீண்ட காலம் ஸ்ரீலங்காவில் வாழ்ந்து வருபவர்.

நாளை நடைபெறும் ஸ்ரீலங்காவின் ஐம்பதாவது (பொன் விழா) சுதந்திர தின நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக கொழும்பு வரும் பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் அவருக்கு 'சேர்' பட்டம் வழங்கி, விருந்தளித்து கௌரவிக்க ஏற்பாடாகியிருந்தது.

அதை ஒட்டி கொழும்பு இல்லத்தில் தங்கியிருந்த அவரை பிரிட்டனின் "சண்டே மிரர்" பத்திரிகை தொலைபேசி மூலம் பேட்டி கண்டது. அந்தப் பேட்டியே தற்போது சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றது.

இலங்கையில் தன்னினச் சேர்க்கையில் தாமும் ஈடுபட்டதை அந்தப் பேட்டியில் ஒப்புக் கொண்ட அவர், 'மிகை உணர்ச்சிக்கு உட்பட்ட பெற்றோர்களே இந்த விடயத்தைப் பெரிது படுத்தி, பெரும் சேதம் விளைவிக்கின்றனர். இளைஞர்கள் இதைப் பெரிது படுத்தாவிட்டால் இது ஒரு விவகாரமே அல்ல' — என்று குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தினால் பலத்த சர்ச்சை உருவாகியிருக்கின்றது. தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்ட ஒருவருக்கு பிரிட்டிஷ் இளவரசர் 'சேர்' பட்டம் வழங்கலாமா என்பதே தற்போது எழுப்பப்பட்டிருக்கும் சர்ச்சையாகும்.

தமக்கு விருது வழங்குவதால் பிரிட்டிஷ் இளவரசருக்கு ஏற்படக் கூடிய சங்கடங்களைத் தவிர்ப்பதற்காக விருது வழங்கும் நிகழ்ச்சியைத் தள்ளி வைக்கும்படி ஆர்தர் சி. கிளார்க் கோரியுள்ளார்.

## கிளிநொச்சிப்...

(முதலாம் பக்கத் தொடர்)
பொறிவெடிகள் ஆகியவை காரணமாக மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியுள்ளதால் துப்புரவுப் பணி மிக மந்தகதியிலேயே நடப்பதாகவும்—

வடபகுதி படைத்தலைமையகம் நேற்றிரவு, 11 மணியளவில் விடுத்த செய்திக் குறிப்பு தெரிவித்தது.

### புலிகளின் குரல் வெளியிட்ட தகவல்

நேற்று முன்தினம் ஆரம்பமான சமர் குறித்து 'புலிகளின் குரல்' நேற்று வெளியிட்ட தகவல்கள் வருமாறு:

கிளிநொச்சியில் உள்ள படைத்தளத்தின் முன்னணி நிலைகளையும், அரண்களையும் தகர்த்து அழித்து உள்நுழைந்த விடுதலைப் புலிகள் அங்கிருந்த படை முகாம்களையும், மினி முகாம்களையும் நிர்மூலமாக்கியுள்ளனர்.

பெரிய படை முகாம்களையும் பலமான முன்னணி அரண்களையும் கொண்ட தளங்களை அமைத்து நிலைகொண்டிருந்த படையினர் மீது நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலை ஆரம்பித்தனர்.

படைத்தளத்தின் பலமான முன்னணி அரண்களையும், மினி முகாம்களையும், காப்பரண்களையும் மற்றும் பல பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தகர்த்து உள்நுழைந்த விடுதலைப் புலிகள் அங்கிருந்த முகாம்களைத் தகர்த்தனர்.

தாக்கியழிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான இராணுவ ஆயுத தளபாடங்களையும், இராணுவ தஸ்தாவேஜுகளையும் படையினரின் சடலங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

கிளிநொச்சி படைத்தளம் மீது திங்களன்று இரண்டாவது நாளாகவும் புலிகள் உக்கிர தாக்குதல் நடத்திவருகின்றனர்.

படைத்தரப்பு இழப்புக்களை குறைத்து வெளியிடுவதன் மூலம் தாக்குதல் தொடர்பான தகவல்களையும் அரசு மூடி மறைத்து வருகின்றது-என்று தெரிவிக்கப்பட்டது.

### படைத் தரப்பு தகவல்

இவ்விடயம் குறித்து படைதரப்பு நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

புலிகளின் மேலும் பல சடலங்கள் தப்பியோடும் புலிகள் விட்டுச்சென்ற ஆயுதங்கள், கிரனேட்டுகள், மருந்துகள் ஆகியனகைப்பற்றப்பட்டு வருகின்றன. அச்சடலங்கள் பல அழுகும் நிலையில் உள்ளன. பழுதடையாத சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் ஒப்படைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை மூன்று அதிகாரிகளும் 43 படையினரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுளது. சிறு காயமுற்ற படையினர் சிகிச்சைக்குப்பின் தமது படையணிகளுக்குத் திரும்பி விட்டனர்.

பலத்த இழப்புகளைச் சந்தித்துள்ள புலிகள் இச்சமர் குறித்து பொய்ப்பிரசாரத்தை மேற் கொண்டு வருகின்றனர் —என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த 210 படையினரில் 27 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வேறு செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. (உ-ஐ-3-9)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி புஸ்பராஜா

ஏழாலை மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற யாழ். அரசினர் வைத்தியசாலை விப்ட் ஒப்பரேற்றர் இளையதம்பி புஸ்பராஜா காலமாகிவிட்டார்.

இவர் ராசமலரின் அன்புக் கணவரும், வசீகரன், சுதர்சினி, சுதாகரன், சுதாசினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு நாளை (4-2-98) புதன்கிழமை காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ராசமலர்
(மனைவி)

120, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(53066)

### பரராசசேகரம் சரவணமுத்து (NAVY)

தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த ப. சரவணமுத்து (இளைப்பாறிய கடற்படை உத்தியோகத்தர்) 01-02-98 அதிகாலை காலமானார்.

அன்னார் பரராசசேகரம் - பாறுவதிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், இராசமணியின் (இளைப்பாறிய ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், செந்தில்குமரனின் (யாழ். மத்திய கல்லூரி A/L மாணவன்) பாசமிகு தந்தையும், மீசாலை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற காசித்தம்பி - அன்னம்மா தம்பதியினரின் அருமை மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01-02-98 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
ச. செந்தில்குமரன்
(மகன்)

(சி/2789)





பிற்போடப்பட்டது

பெப்ரவரி 5 ஆம் திகதி நடைபெறவிருந்த எமது நிறுவன தின (Institute Day) வைபவம் பெப்ரவரி 15 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

- DIRECTOR

IIS

Clock Tower Road,
Jaffna.

(சி/2782)

★ கொழும்பு விலைக்கே யாழ்ப்பாணத்தில் வாங்கலாம்!

அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்

லீலா கலண்டர்கள், டயறிகள்

★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்

கிடைக்குமிடங்கள்:

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி.

கரன் புக்சென்டர்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-02-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.